# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2010 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, ஹெம்டன் விலேஜ் இலங்கை நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2010*, பெப்புருவரி மாதம் *12* ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2010 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, ஹெம்டன் விலேஜ் இலங்கை நம்பிக்கைப்பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டம்

[2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ. கூட். 21/2007

## ஹெம்டன் விலேஜ் இலங்கை நம்பிக்கைப்பொறுப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

"ஹெம்டன் விலேஜ் - இலங்கை நிவாரண நிதிய நம்பிக்கைப் பொறுப்பு" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நம்பிக்கைப்பொறுப்பொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏனையவற்றுடன் "ஹெம்டன் விலேஜ் - இலங்கை" எனப் பெயரிப்படவுள்ள மாதிரிக் கிராமம் ஒன்றை நிர்மாணிக்கும் நோக்கத்திற்காக இதற்கு முன்னர் காலியில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக் கைப்பொறுப்பாளர் சபை சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பைக் கூட்டிணைக்க விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களின் நன்மைக் காக இருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் 2010 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, "ஹெம்டன் விலேஜ் - இலங்கை நம்பிக்கைப்பொறுப்பு" (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*ஹெம்டன் விலேஜ் இலங்கை நம்பிக்கைப் பொறுப்பைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும், (இதனகத்துப்பின்னர் "ஹெம்டன் விலேஜ் இலங்கை நிவாரண நிதிய நம்பிக்கைப்பொறுப்பு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "ஹெம்டன் விலேஜ் இலங்கை நிவாரண நிதிய நம்பிக்கைப் பொறுப்பின்" உறுப்பினர்களாக தற்போது உள்ளவர்களான அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர் களான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "இலங்கை ஹெம்டன் விலேஜ் - நம்பிக்கைப்பொறுப்பு" என்ற பெயர்மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன், பொது

இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) ஒரு விளையாட்டு மைதானம், வழிபாட்டுத்தலம், அவசியமானவைகளினதும் மளிகைப் பொருட்களினது விற்பனைக்கான வசதிகள் என்பன உட்பட ஐம்பது வீடுகளும் ஒரு சனசமூக நிலையமும் அத்துடன் சொல்லப்பட்ட கிராமத்திற்குத் தேவைப்படுத்தக்கூடிய வேறு எவையேனும் கட்டிடங்களும் அல்லது கட்டுமானங்களும்கொண்ட ஹெம்டன் விலேஜ் - இலங்கை எனப் பெயரிப்பட்ட மாதிரிக் கிராமம் ஒன்றை நிர்மாணித்தல் ;

(ஆ) சொல்லப்பட்ட கிராமத்தைப் பேணுதல், மேம்படுத்துதல் அத்துடன் முகாமைசெய்தல் என்பவற்றிற்கு அவசியமான அனைத்து வழிமுறைகளையும் மேற்கொள்ளுதல் ;

(இ) இலங்கை ஹெம்டன் விலேஜில் வதிபவர்களுக்கும் இங்கிலாந்து மிடில்செக்ஸ் ஹெம்டன் என்ற இடத்தில் வதிபவர்களுக்குமிடையில் கலாசார உறவுகளை ஊக்குவித்தல் ;

(ஈ) கிராமத்தில் வதியும் மாணவர்களினதும் குறிப்பாக இளம் ஆட்களினதும் கல்வியையும் பயிற்சியையும் மேம்படுத்துதல் ; அத்துடன்

(உ) குறிப்பாக கிராமத்தில் வதிபவர்களின் பொருளாதார, சமூக, கலாசார முன்னெடுப்பை ஊக்குவித்தல்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**4.** (1) கூட்டுத்தாபனத்தினுடைய அலுவல்கள் 6 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய தவிசாளரையும், துணைத் தவிசாளரையும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்க தெரிவுசெய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட அத்தகைய வேறு பதவிதாங்குநர்களையும்கொண்ட பணிப்பாளர் சபையால் (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபை இச்சட்டம் தொடங்கும் நாளுக்கு நேர்முந்திய நாளன்று ஹெம்டன் விலேஜ் இலங்கை நம்பிக்கைப்பொறுப்பு நிவாரண நிதியத்தின் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) சபை உறுப்பினர்கள் முற்றிலும் கௌரவ தன்மையொன்றிலேயே செயற்படுதல் வேண்டும் என்பதுடன் சம்பளம், படிகள், மதிப்பூதியம் என்றவகையில் வேதனம் எதனையும் பெறுவதற்கு உரித்துடையவர்களாதலாகாது. ஆனால், தங்கள் கடமைகளைப் புரிகையில் உள்ளவாறாகவே அவர்களால் உறப்பட்ட செலவுகளுக்கு செலவீடுசெய்யப்படுதல் வேண்டும்.

(4) ஆளெவரும், அவர்

(அ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்கி முறிந்தவராக வெளிப்படுத்தப்பட்ட ஆளொருவராக இருப்பின் ;

(ஆ) ஒழுக்கநெறி சம்பந்தப்பட்ட தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படின் ;

(இ) இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்தசுவாதீனமற்றவராக அல்லது உளரீதியில் குறைபாடுடையவராகக் காணப்படின் அல்லது வெளிப்படுத்தப்படின் ;

(ஈ) சபையின் வலுவளிப்பை முன்னரே பெற்றுக்கொள்ளாமல் ஓராண்டை விஞ்சிய ஒரு காலப்பகுதிக்கு தொடர்ச்சியாக இலங்கையில் இல்லாதிருப்பின் ; அல்லது

(உ) பணிப்பாளர் ஒருவராக செயற்படுவதை அசட்டை செய்யின் அல்லது செயற்படத் தவறின்,

சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதிலிருந்து அல்லது பதவியில் தொடர்ந்திருப்பதிலிருந்து தகைமையிழந்தவராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**5**. இச்சட்டத்தினதும், எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனம் பின்வரும் தத்துவம் உட்பட, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் ஊக்குவிப்பதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையதுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் விடயங்களையும் புரிவதற்கும் நிறைவேற்றுதற்குமான தத்துவமுடையதாதல் வேண்டும்.

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படும் காணிகளை சுவீகரிப்பதற்கும், வைத்திருப்பதற்கும், எடுப்பதற்கும், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு எடுப்பதற்கும் ஈடுவைப்பதற்கும் அடைமானம் வைப்பதற்கும் விற்பனை செய்வதற்கும் கொடுத்து மாற்றுவதற்கும் பராதீனப்படுத்துவதற்கும் பாரபந்தப்படுத்துவதற்கும் அல்லது கையுதிர்ப்பதற்கும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காக அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும்

நேரடியாகவோ அல்லது கூட்டுத்தாபனத்தால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் மூலமோ அல்லது முகவர்மூலமோ செய்துகொள்ளுதலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும் ;

(இ) காசாக அல்லது பொருளாகக் கொடைகளையும், நன்கொடைகளையும், விருப்பாவனக்கையளிப்புகளையும் ஏற்றுக்கொள்ளுதலும் ;

(ஈ) அதன் நிதிகளை முதலீடுசெய்தலும் ஏதேனும் வங்கியில் நடைமுறை, வைப்பு அத்துடன் சேமிப்புக் கணக்குகளைப் பேணுதலும் ;

(உ) கூட்டுத்தாபனம் பொருத்தமானதெனக் கருதக்கூடிய அத்தகைய முறையிலும் அத்தகைய பிணைப்பொறுப்பின்மீதும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகப் பணத்தை கடனாகப் பெறுதல் அல்லது முதலீடு செய்தல் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், இடமாற்றம் செய்தல், அவர்களின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டை பிரயோகித்தல் அத்துடன் அவர்களை பதவிநீக்குதல்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டும் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றுள் எவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராக விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல் அத்துடன் உறுப்பினாக்களைச் சேர்த்தல், அவர்களை விலக்குதல் அல்லது அவர்கள் பதவிவிலகல் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தெரிவுசெய்தல், அவர்கள் பதவிதுறத்தல், பதவியை வறிதாக்கல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அவர்களின் தத்துவங்களும் கடமைகளும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களைத் தெரிவு செய்தலும் அதன் தத்துவங்களும் நடத்தையும் கடமைகளும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும் கடமைகளும், பணிகளும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் கூட்டங்களில் அனுசரிக்கப்பட வேண்டிய நடவடிக்கைமுறைகள், கூட்டங்களைக் கூட்டுதலும் நடாத்துதலும் அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சி நிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும், அதில் அலுவல்களை நடாத்துதலும் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும் அதன் நிதியங்களின் கட்டுக் காப்பும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட விதி எதுவும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்று என்றாற்போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதேபோன்ற முறையிலும் திருத்தப் படலாம், மாற்றப்படலாம் அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண் டிருத்தல் வேண்டும் என்பதுடன் அன்பளிப்பு, மரணசாதனக் கையளிப்பு, அறுதிமாற்றம், நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள், மானியக்கொடை என்றவகையில் அல்லது வேறுவகையில் கிடைக்கக்கூடிய எல்லாப் பணங்களும் சபை தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்படும் ஏதேனும் செலவினம் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**8**. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாக விருத்தல் வேண்டும். கணக்குகளும் கணக்காய்வும்.

(2) கூட்டுத்தாபனமானது, கூட்டுத்தாபனத்தின் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் சபையினால் நியமிக்கப் பட்ட ஒரு தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(அ) இலங்கையின் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக் கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பின ரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவை யினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற் காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்ட வராகவுமுள்ள தனியாள் ஒருவர் எனப் பொருளாகும்; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவராகவும் இருக்கின்ற தான கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**9**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, செயலாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன், கூட்டுத்தாபனத்தின் தலைவரினதும் செயலாளரினதும் சபையால் அதன் பொருட்டு முறையாக அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு ஆளினதும் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதலானது, எவரேனுமாள் சாட்சி ஒருவராக ஒப்பமிடுவதினின்று தனிவேறானதாதலும் வேண்டும்.

*நம்பிக்கைப் பொறுப்பால் செலுத்தப் படற்பாலனவையும் நம்பிக்கைப் பொறுப்பிற்குச் செலுத்தப்படற் பாலனவையுமான தனிசுகள்.*

**10**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்றுள்ள ஹெம்டன் விலேஜ் இலங்கை நிவாரண நிதிய நம்பிக்கைப் பொறுப்பின் எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று ஹெம்டன் விலேஜ் இலங்கை நிவாரண நிதிய நம்பிக்கைப்பொறுப்பிற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*உறுப்பினர்களின் பொறுப்பின் வரையறை.*

**11**. கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும் கூட்டுத்தாபனத்தின் தனிசுகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் நோக்கத்திற்கு அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்கு உறுப்பாண்மைக் கட்டணமாக அத்தகைய உறுப்பினரிடமிருந்து வருமதியான தொகையை விஞ்சிய உதவுதொகை எதனையும் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

*கூட்டுத்தாபனத்தின் பணங்களையும் ஆதனத்தையும் பிரயோகித்தல்.*

**12**. கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனமும் அவை எவ்வாறு பெறப்பட்டிருப்பினும்சரி, இதன்கண் தரப்பட்டுள்ள குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப் படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பகுதி எதுவும் பங்கிலாபம், அல்லது இலாபங்கள் என்றவகையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ, மாற்றப்படுதலோ ஆகாது.

**13.** கூட்டுத்தாபனம் ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, மரணசாதனக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையில் அதற்கு உரித்தாக் கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் எடுக்கவும் வைத்திருக்கவும் சட்டத்தில் இயலுமானதாதலும் ஆற்றல் உடையதாதலும் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக் கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள முழுத் தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப் படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும், அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.*

**14.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்தபின்னர் ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத் தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், அது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக்கொண்டதும், அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது இலா பத்தைப் பகிர்ந்தளித்தலை அதன் அவற்றின் விதிகளின்மூலம் தடைசெய்கின்றதுமான கழகத்திற்கு அல்லது கழகங்களுக்கு கொடுக்கப்படுதல் அல்லது மாற்றப்படுதல் வேண்டும். அத்த கைய கழகம் அல்லது கழகங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் போது அல்லது அதற்கு உடன்முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*கலைக்கப்படுவதன் மீது எஞ்சியுள்ள ஆதனம்.*

**15.** இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**16.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்